2006 ஜனவரி 21]

69—

கால்நடை துணை மருந்தகம்

***19847—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, தொட்டம்பட்டி, ஆர். கோபிநாதம்பட்டி, மோளையானூர் ஆகிய இடங்களில் கால்நடை துணை மருந்தகம் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி கோட்டம், மொரப்பூர் தொகுதியில் உள்ள தொட்டம்பட்டி, ஆர். கோபிநாதம்பட்டி, மோளையானூர் ஆகிய இடங்களில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) எழாது.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள புட்டிரெட்டிப்பட்டி கால்நடை கிளை நிலையத்தை முழு வசதியுடன் கூடிய கால்நடை மருந்தகமாக நிலை உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அந்த கிராமத்து மக்கள் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொட்டம்பட்டி, ஆர். கோபிநாதம்பட்டி பகுதிகளிலுள்ள கால்நடைகள் மருத்துவ வசதி பெற வேண்டுமென்று சொன்னால் அருகிலேயுள்ள மொரப்பூர் கால்நடை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். அது, அந்த கிராமத்திலிருந்து சுமார் 6 கி.மீ. தொலை தூரம் நடந்து செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. மோளையானூர் கிராம கால்நடைகள் மருத்துவ வசதி பெற வேண்டுமென்று சொன்னால் பாப்பிரெட்டிப்பட்டியிலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு 5 கி.மீ. கடந்து செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்தக்

கிராமங்கள் மலைப் பகுதியைச் சார்ந்த கிராமங்கள் ஆகும். அங்கே மேய்ச்சல் நிலங்கள் அதிகமாக உள்ளன. அங்கே கால்நடைகளினுடைய எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. எனவே, அந்த கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கனிவுடன் மீண்டும் பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல அவர்களுடைய அத்தனை பகுதிகளுக்கும் அள்ளிக் கொடுக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயமாக கனிவுடன் பரிசீலித்து ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனியப்பன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தில்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள்.

திரு. பெ. பழனியப்பன்: 10 கோடி ரூபாய் செலவில் 24,051 கால்நடை மருத்துவப் பாதுகாப்புத் திட்டத்தை நடத்தி வைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் என்னுடைய தொகுதியிலுள்ள மோளையானூர், கோபிநாதம்பட்டி, தொட்டம்பட்டி போன்ற கிராமங்களில் புதிய கால்நடை மருத்துவமனைகள் துவங்குவதற்கு உறுதி அளித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் பழையாறு என்ற மிகப் பெரிய மீன்பிடித் துறைமுகம் உள்ளது. அங்கு பழையாறு, புதுப்பட்டினம், மடவாமேடு, கொடியம்பாளையம், மாதானம் போன்ற பெரிய கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி சுனாமியால் பாதிக்கப்பட்டபோதுகூட

2006 ஜனவரி 21]

அவர்களுக்கு முழு வாழ்வளித்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்த வேளையில் அங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் இல்லாததினால் கிட்டத்தட்ட பழையாற்றிலிருந்து மாதானம் என்கின்ற இடத்திற்கு சுமார் 8 கி.மீ. தூரம் அவர்கள் கால்நடைகளை ஓட்டிச் சென்று மருத்துவம் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருப்பதனால், பழையாறு, புதுப்பட்டினம் பகுதிகளினுடைய பொதுமக்களின் நலன் கருதி அங்கு ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று புதுப்பட்டினம் கிராமத்திற்கு அந்தப் பொதுமக்களுடைய வசதிக்காக அம்மா அவர்களுடைய அரசு இதை நிதிநிலைக்கேற்ப கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. ஏழுமலை.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், தேவனூர் கால்நடை மருத்துவமனையைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மட்டும் சுமார் 90 கால்நடை மருந்தகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் 19 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயை ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினருடைய செஞ்சி தொகுதியிலே உள்ள கால்நடை மருந்தகத்திற்கும் இந்த நிதியாண்டில் அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலித்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 70, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.